## கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை.திரு.நா.சீனிவாசன்,
கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்,
(கூடுதல் பொறுப்பு)
கோவில்பட்டி.

ந.க.2964/2023/ப.தொ நாள் : 14.11.2023

அம்மையீர்,

பொருள் : பணிக்குழு –நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் CCSE IV Group IV (2019–2020 முதல் 2022–2023 வரை) தெரிவு செய்த இளநிலை உதவியாளர்கள் கூட்டுறவு தணிக்கைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணியமர்த்தம் ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண்.1934/PSD.B1/2023 நாள்.10.08.2023
2. கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.12354/2023/அபஅ.2(2) நாள்.08.11.2023

*******

பார்வை(1)ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2019–2020 முதல் 2022–2023 வரை ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணித் தேர்வு (CCSE IV) Group IV–ல் தெரிவு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(2)ல் காணும் கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்கண்ட இளநிலை உதவியாளர் இவ்வலுவலக கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளராக நியமிக்கப்படுகிறார்.

- திரு.E.கணேஷ், இளநிலை உதவியாளர்

இவரது பணி நியமனம் பார்வை (1)ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் மற்றும் பார்வை(2)ல் காணும் கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ள விதி முறைகளுக்கு உட்பட்டதாகும்.

1. தனியரது நியமனம் முற்றிலும் தற்காலிகமானது எனவும், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV (தொகுதி – IV) (அறிவிப்பு எண்.07/2022, நாள்.30.03.2022) குறித்து சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையுள்ள வழக்குகளின் நீதிப்பேராணை விண்ணப்பங்கள் மற்றும் இதர தெரிவு தொடர்பான நிலுவை உள்ள வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடனும் பணி ஆணை வழங்கப்படுகிறது.
2. தேர்வாணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மேற்படி நபர் அளித்துள்ள விவரங்கள் தவறானவையென பின்னர் தெரியவந்தால், இவரது தெரிவு மற்றும் தற்காலிக பணி நியமனம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி உடனடியாக இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
3. பணி நியமன ஆணை பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து 15 நாட்களுக்குள் பணியில் சேர வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசின் பிற துறையில் பணிபுரிபவரானால், அத்துறையிலிருந்து பணி விடுவிக்கப்பட்டு பணிசேர் காலம் எதுவும் துய்க்காமல் உடன் பணியேற்க வேண்டும். பணியில் சேர்வதற்கான காலகெடுவினை நீட்டிக்க கோரும் விண்ணப்பம் ஏதும்

இத்துறையால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும், மேலும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் பணியில் சேராவிடின் இவரது பெயர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் ( பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 7 (5)ன்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைப் பட்டியலிலிருந்து நீக்க பரிந்துரை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

4. தனியர் பணியில் சேரும் நாள் முதல் தமிழ்நாடு திருத்திய ஊதிய நிர்ணய விதிகள் 2017ன் கீழ் ரூ.19,500-62000 (நிலை- 08) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறத் தகுதியுடையவர் ஆவார். இப்பணி தற்காலிகமானது இவர் பணியில் சேர்ந்த நாள் முதல், தொடர்ச்சியாக 3 ஆண்டு காலத்திற்குள் 2 ஆண்டுகள் பணிக்காலத்தில் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும். தகுதிகாண் பருவ காலத்தில் இளநிலை உதவியாளர் பணியில் அல்லது நடத்தையில் அதிருப்தி ஏற்பட்டால் எந்த நேரத்திலும் தனியர் பணியிலிருந்து நீக்கப்படலாம். இவர் தகுதிகாண் பருவ காலத்தில் நிறைவு செய்ய வேண்டிய பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

5. பார்வை (1)ல் காணும் தேர்வாணைய கடிதத்துடன் பெறப்பட்டுள்ள பட்டியலில் சம்மந்தப்பட்டவரின் மதிப்பெண் அடிப்படையிலேயே முன்னுரிமை வரிசை எண் வழங்கப்படும்.

6. தனியர் பணியில் சேரும் போது கீழ் குறிப்பிட்டுள்ள அசல் சான்றிதழ்களை உடன் கொண்டு வரவேண்டும். அச்சான்றிதழ்கள் அலுவலக தலைவரால் சரிபார்க்கப்பட்ட பின்னரே பணியில் சேர அனுமதிக்கப்படுவார். மேலும் அனைத்து கல்வி சான்றிதழ்கள், தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்கள் மற்றும் தொழில் நுட்ப கல்வி சான்றிதழ்களின் மெய்த்தன்மை ஆய்விற்கு உட்படுத்தி உண்மைத் தன்மை சரிபார்க்கப்படும்.

   I. பணியாளர் உடல் தகுதியுடையவராக இருக்கிறாரா என்பதற்கான சிவில் சர்ஜன் அரசு மருத்துவரின் உடற்தகுதி சான்றிதழ்
   II. மாற்றுத் திறனாளிகளுக்கான ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ள தெரிவாளர்கள் எனில் குறைபாட்டின் தன்மை, சதவீதம் மற்றும் பணி மேற்கொள்ளத்தக்க தகுதி குறித்து மாவட்ட மருத்துவக் குழுவிடமிருந்து பெறப்பட்ட உடற்தகுதிச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.
   III. கல்வித் தகுதிக்கான அசல் சான்றிதழ்கள்
   IV. வகுப்பு சான்றிதழ் (Community Certificate)
   V. ஆளறி சான்றிதழ் (Aadhar Card & Pan Card)
   VI. வேலை வாய்ப்பக பதிவு அட்டை

(கையொப்பம்) 14.11.23

கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்
கோவில்பட்டி

பெறுநர்:-

திரு.E.கணேஷ்
12/2 தாசில்தார் பள்ளிவாசல் தெரு,
மதுரை தெற்கு,
மதுரை - 625 001.

நகல்:-

1. கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. "க" பிரிவிற்கு